

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 138 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 12 – வெள்ளிக்கிழமை 27 டிசம்பர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 138: Thiruvalluvar Year - 2055 - Margazhi 12 - Friday 27 December 2024 - Dak 12 Pages ₹ 5.00


## ‘திராவிட மாடல்’ அரசுக்கு என்றும் உறுதுணையாக இருப்பவர் அய்யா நல்லகண்ணு ! – 2026 தேர்தலில்

# தி.மு.க. கூட்டணி 200 இடங்களுக்கும் மேல் வெற்றி பெறுவது உறுதி!

## தகைசால் தமிழர் அய்யா நல்லகண்ணுவின் 100–வது பிறந்தநாள் விழாவில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) சென்னை, தியாகராயர் நகர், பாலன் இல்லத்தில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-**

அய்யா நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு விழா இன்று தொடங்குகிறது. இந்த ஆண்டு முழுவதும் அவருடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும் என்று, அவருக்காக பல்வேறு நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருகின்ற 29ஆம் தேதி மதிப்பிற்குரிய பழ. நெடுமாறன் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கக்கூடிய வகையில் காலையிலிருந்து மாலை வரையில் அந்த நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

**பொதுவுடமை இயக்கத்திற்கும் அய்யா நல்லகண்ணுவுக்கும் நூற்றாண்டு!**

இன்று அந்த விழாவின் தொடக்கமாக நம்முடைய அய்யா நல்லகண்ணு அவர்களை வாழ்த்தக்கூடிய வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் இன்றைக்கு நாமெல்லாம் ஒன்று சேர்ந்து வாழ்த்திக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு ஆண்டும் அவருடைய பிறந்தநாளைக்கு இதே இடத்தில் நாம் கூடி வாழ்த்துவது உண்டு. அந்த அடிப்படையில், இன்றைக்கு கூடியிருக்கின்றோம் என்று சொன்னால், இது அவர் காணக்கூடிய நூற்றாண்டு பிறந்தநாள் விழா.

நம்முடைய மதிப்பிற்குரிய முத்தரசன் அவர்கள் சொன்னதுபோல், பொதுவுடைமை இயக்கத்திற்கும் நூற்றாண்டு, அய்யா நல்லகண்ணு அவர்களுக்கும் நூற்றாண்டு. நம்மைப் பொறுத்தவரையில் இப்படி ஒரு பொருத்தம் யாருக்கும் கிடைத்ததில்லை.

அப்படிப்பட்ட பெரும் வாய்ப்பையும், சிறப்பான வாய்ப்பையும், அரிய வாய்ப்பையும் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய நல்லகண்ணு அவர்களை நானும் உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே சொல்ல வேண்டும் என்றால், நான் வாழ்த்த வரவில்லை. வாழ்த்தைப் பெற வந்திருக்கிறேன். இது தான் உண்மை.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) சென்னை, தியாகராயர்நகர், பாலன் இல்லத்தில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில், சிறப்புரையாற்றினார்.

**எதையும் ஆழமாக சிந்தித்துச் செயல்படுபவர் அய்யா நல்லகண்ணு!**

எல்லோருக்கும் எல்லாம் - சமூக நீதி, சமத்துவத்தை நிலைநாட்டிட வேண்டும் என்ற உணர்வோடு, இன்றைக்கு தமிழகத்தில் உங்கள் அன்போடும், ஆதரவோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கெல்லாம், உறுதுணையாக பக்கபலமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடியவர் நம்முடைய அய்யா நல்லகண்ணு அவர்கள்.

அய்யா நல்லகண்ணு அவர்கள் அமைதியாக, அடக்கமாக அதே நேரத்தில் ஆழமாக எதையும் சிந்தித்து வெளிப்படுத்தக்கூடியவர். அப்படிப்பட்ட அய்யா நல்லகண்ணு அவர்களை உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகிறேன்.

தொடர்ந்து நீங்கள் இருந்து எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டிட வேண்டும், துணை நிற்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு தமிழகத்தில் அமைந்திருக்கக்கூடிய மதச் சார்பற்ற கூட்டணி அமைப்பினுடைய தலைவர்கள் சார்பில் நான் அன்போடு அவரை கேட்டுக் கொண்டு நமது முத்தரசன் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்; நான் செயற்குழுவில் பேசிய அந்தப் பேச்சை கோடிட்டுக் காட்டி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று நான் சொன்னதாக எடுத்துச் சொன்னார். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை என்ன என்று கேட்டால், 200 அல்ல, 200யும் தாண்டி வெற்றி பெறும் வகையில் நம்முடைய கூட்டணி அமைந்திருக்கிறது.

7 ஆண்டு காலமாக இந்தக் கூட்டணி தொடர்ந்து வருகிறது. தேர்தல் களத்தில் நின்று தொடர்ந்து வெற்றியைப் பெற்று வருகிறோம். ஆகவே, இந்தக் கூட்டணியைப் பொறுத்த வரைக்கும், கொள்கைக் கூட்டணி மட்டுமல்ல, இது நிரந்தரக் கூட்டணி என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு

> **அய்யா நல்லகண்ணு நமக்கு தொடர்ந்து வழிகாட்ட வாழ்த்துகிறேன்!**
>
> **7 ஆண்டு காலமாக இந்தக் கூட்டணி தொடர்ந்து வருகிறது. தேர்தல் களத்தில் நின்று தொடர்ந்து வெற்றியைப் பெற்று வருகிறோம். ஆகவே, இந்தக் கூட்டணி யைப் பொறுத்தவரைக்கும், கொள்கைக் கூட் டணி மட்டுமல்ல, இது நிரந்தரக் கூட்டணி என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத் தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்கவேண்டும் என்று அன்போடு கேட்டு, உங்கள் அனைவரின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பிலும், அய்யா நல்லக்கண்ணு அவர்கள் வாழ்ந்து நமக்கு வழிகாட்டிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

நீங்கள் எல்லாம் துணை நிற்கவேண்டும் என்று அன்போடு கேட்டு உங்கள் அனைவரின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அய்யா நல்லகண்ணு அவர்கள் வாழ்ந்து நமக்கு வழிகாட்டிட வேண்டும் என்று கேட்டு, வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## திருவைகுண்டம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி

# ‘தோழர் நல்லகண்ணு நூற்றாண்டுக் கட்டடம்’ எனப் பெயர் சூட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 27-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அய்யா அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு, திருவைகுண்டம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, அன்னாரின் பெயரைச் சூட்டிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டின் முதுபெரும் பொதுவுடைமைச் சிந்தனையாளரும், விடுதலைப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவருமான தோழர் இரா.நல்லகண்ணு அய்யா அவர்களின் 100வது பிறந்தநாள் நேற்று (26.12.2024) கொண்டாடப்பட்டது.

நமது மாநிலத்திற்கும், தமிழ் மக்களுக்கும் அன்னார் அவர்கள் ஆற்றிய சிறப்பான தொண்டுகளைப் போற்றும்விதமாக, தமிழ்நாடு அரசு 2022ஆம் ஆண்டு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கிச் சிறப்பித்தது. நேற்று (26.12.2024) அவரது நூறாவது பிறந்த நாள் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வாழ்த்திய போது, அவர் விடுத்த கோரிக்கையை ஏற்று, அவர் பிறந்த திருவைகுண்டம் அரசு மருத்துவமனையை சி.டி.ஸ்கேன் வசதியுடன் தரம் உயர்த்தி, கூடுதல் வசதிகளுடன் புதிய மருத்துவமனைக் கட்டடம் அமைத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த 85 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் பணியையே எப்போதும் தனது தலையாயக் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வரும் தன்னலமற்ற தகைசால் தமிழர் தோழர் இரா.நல்லகண்ணு அய்யா அவர்களின் பெருமையைப் போற்றும்வகையில், திருவைகுண்டத்தில் அமையவிருக்கும் புதிய மருத்துவமனைக் கட்டடத்திற்கு “தோழர் நல்லகண்ணு நூற்றாண்டுக் கட்டடம்” எனப் பெயரிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2024) சென்னை, தியாகராயர் நகர், பாலன் இல்லத்தில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விடுதலை போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில், அவருக்கு பொன்னாடை அணிவித்து, அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் புத்தகத்தை வழங்கி பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில், கழகப் பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி.ராமச்சந்திரன், அப்துல் சமது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் வீரபாண்டியன் மற்றும் பெரியசாமி, ஆம் ஆத்மி கட்சி தமிழ்நாடு மாநிலத் தலைவர் வசீகரன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.